முறைகள், பல வழக்குகளில் சம்பந்தப்பட்டு, தண்டனை அனைந்திருக்கிறார்கள். அவர்கள் என்னென்ன குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டார்கள் என்னென்ன தண்டனை அடைந்தார்கள் என்பது பற்றிய விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. அவை மிக ஆபாசமாக இருப்பதால், அவற்றைச் சபையில் சொல்ல விரும்பவில்லை. இது சாதாரண விஷயம் யாரோ சொல்லுகிறார்கள், பேசினார்கள் என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற முறையில் கொண்டுவருவது முறையில்லை. இது அரசின் அன்றாட அலுவல்களில் ஒன்று. ஆகவே, இதற்கு அனுமதி வழங்கத் தேவையில்லை என்று சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை ஒட்டி, இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். முதல் அமைச்சர் தொலைபேசி மூலம் கிடைத்த தகவலை வைத்துக் கொண்டுதவறான காரியத்திற்கு இந்தத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். எனக்குக் கிடைத்த தகவல், சுதந்திராக் கட்சி அந்தப் பகுதித் தலைவரும், முஸ்லீம் லீக் செயலாளரும் (சிரிப்பு) வந்துவிட்டேன், சொல்லுகிறேன், இருங்கள் எனக்குக் கொடுத்தார்கள். அவர்கள் குறிப்பிட்டது இரண்டு பெண்களைப் பற்றித்தான். அவர்கள் வீட்டில் பிராந்தி வைத்திருப்பதாகவும், அவர்களைக் கைது செய்து அவர்கள் பேரில் கேஸ் போட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டது. நான் எனக்குக் கிடைத்த யதார்த்த நிலையைச் சொன்னேன். மு.ப. 10–00

Dr. H. V. HANDE : While I am grateful to the member for having given serious consideration to the information given by the—Swatantra Party Member—I do not know the name of the gentleman I wish to say that it might have been done in his personal capacity and not on behalf of the party.

(4) அரசினர் தீர்மானங்கள்—(அ) விதி 41 (3))ஐ—தளர்த்தல்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ் 41-வது விதி, (3)-வது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்" என்கின்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)'

(ஆ) கவன ஈர்ப்பு அறிவிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படாமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு இரா நாராயணன் அவர்கள் தன்னுடைய இருக்கையில் இல்லாததால் அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

அதே போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பூபதி அவர்களும் தன்னுடைய இடத்தில் இல்லாததால், அவர் கொடுத்திருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானமும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு கிட்டப்பா அவர்களும் தன் இருக்கையில் இல்லாததால், அவருடைய தீர்மானமும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.